என்ற யோசனை உயர்நீதி மன்றத்திற்குத் தெரிவிக்கப்பட்டது. ஆனால் போதுமான அளவுக்குவேலை இருக்காது என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

*16 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூரில் சப்-கோர்ட் திறக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

(இ) ஆம் எனில், எப்போது திறக்கப்படும்?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) & (இ) 'இம்மாநிலத்தில் உள்ள நாட்டியல் (சிவில்) குற்றவியல் (கிரிமினல்) நீதி மன்றங்களின் அதிகார வரம்பினை ஆராயும் குழு' இப்பொருள்பற்றிப் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, கரூர் ஒரு பெரிய நகரம். மேலும் டிவிஷனல் ஹெட்குவார்ட்டர்ஸ் கரூரில் இருக்கிறது. அதைச் சுற்றிப் பல இடங்கள் இருப்பதால், இந்த சப்-கோர்ட் அமைக்கும் முயற்சியைத் துரிதப்படுத்த ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவரவர்களே, இந்த ஆராயும் குழுவிடத்தில் இந்தப் பிரச்னையை வைக்கவேண்டுமென்று உயர்நீதிமன்றம் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி: சார், இந்த சப் கோர்ட், டிஸ்டிரிக்ட் முன்சீப் கோர்ட் அமைப்பது சம்பந்தமாக வரதராஜன் கமிட்டி அமைத்து ஒரு ஆண்டுக்கு மேலாகிவிட்டது. அவர்கள் எப்பொழுது சிபார்சைக் கொடுப்பார்கள்?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அவர்கள் மாநிலத்தில் ஒவ்வொரு பகுதிக்கும் சென்று ஆங்காங்கு பொதுமக்களையும், வழக்குரைஞர்களையும் சந்தித்துக் கருத்துக்களைச் சேகரிக்கிறார்கள். அவைகளெல்லாம் முடிந்தபிறகு விரைவில் தருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

Release of prohibition offenders

*17 *Q.*—Dr. H. V. HANDE: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether it is a fact that prohibition offenders have been released around 4th week of August 1971 due to scrapping of prohibition throughout the State; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) & (இ) மதுவருந்திய அல்லது மது வாங்கிய குற்றத்திற்காக அல்லது குடிபோதையில் இருந்த குற்றத்திற்காகத் தண்டனை அனுபவித்து வந்த கைதிகளுக்கு மட்டுமே தண்டனை குறைப்பதற்கு அரசு ஆணையிட்டுள்ளது. மொத்தத்தில் 802 கைதிகள் விடுவிக்கப்பட்டனர்.